

திருமணம்

செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ.

1864 - 1921

பேராசிரியர்

திருமணம் செல்வக் கேசவராய முதலியார்

பயன்படுத்திய இந்நூல்

அவர்கள்தம் பேரன் திருவாளர்

தி நம்பிராசன் அவர்களால்

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு

அன்பளிப்பாக

வழங்கப்பெற்றது.

ஸ்ரீமதே

இராமாநுஜாயநம:

# வியக்திபோதிநி

என்னும்

## வேற்றுமையுணர்ச்சி

இஃது

கனம்பொருந்தியதுரைத்தனத்தாரா
லேற்படுத்தியசிற்பச்சாத்திரக்கல்வி
ச்சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை
நடாத்தும்.

பு-செ-இராஜகோபாலமுதலியார்
அவர்களால்

---

வித்தியார்த்திகட்குபயோகமாகும்
பொருட்டியற்றப்பட்டுச்
சிந்தாத்திரிப்பேட்டைச்சாமிநாய்க்கர்வீதி
எஅ-நம்பர்-வீட்டில்-

மட்டுவார்குழலம்பாளச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது
யுவ௵-கார்த்திகைமீ.

## நான்முகம்

# விபக்திபோதினி

என்னும்.

## வேற்றுமையுணர்ச்சி.

ழ்ப்பாஷை பற்பலபாஷைகளாற் கலப்புண்டு த
லல... ர விசேஷப்படுத்தியு மிதரபாஷைகள்போ
ம லிபபாஷையின் பெயர்ச்சொற்கட்கு வேற்று
யினாற் பொருள்வேறுபடுவதும் வினையினாற் றிணை
லெண்ணிடங்கால முதலியவற்றால் வேறுபடுவது
றுபொழுதினின்றும் விவகாரயுக்தமா யிருப்பதி
லிலக்கணமுற்றுங் கிரமமாய்த் தொல்லாசிரியர் கூ
வுரங்கே படித்து முடிப்பதற்கு முன்னமவைகளி
சொரூபத்தைக் கொஞ்சங்கொஞ்சந் தெரிந்து
காள்ளுத லவசியமாயிருப்பதுமன்றிக் கனம்வகித்த
னைத்தனத்தாரா லேற்படுத்திய திராவிடபரீட்சைகளி,
வமித்தன்மையானசொற்கள் வினாக்களிற் காணப்ப
டிருக்கிற காரணத்தினாலு மெம்மான்முன்னம்பதிப்
க்கப்பட்டிருக்கிற சிற்றிலக்கணச்சுருக்கம் பஞ்சலக்
ணச்சுருக்கவினாவிடை முதலியவின்னு மனேகநூல்க

# நூன்முகம்.

ளிருப்பினு மதிகவிரிவாய் வேற்றுமை, வினை
ண்டைக்குறித்து மாத்திரமிருக்கவேண்டுமெ
மாணவர்வேண்டுகோளின்படியே நன்றென்
த்தொல்லாசிரியர்களியற்றிய,அகத்தியம், தொ
யம்,நன்னூல், இலக்கணவிளக்கம்,வீரசோழிய
மிநாதமுதலிய பலநூல்களினுதவியை மேற்
டையிடை தலைமாணவர்கட்குமுறையே முப்ப
த்தியியற்றிய விச்சிறுபுத்தகம் பேருதவியா யிரு
மென்கிற காரணத்தினானும்.பதிப்பிக்கப்பட்டது.

பு-செ-இராஜகோபாலமுதலிய

# பெயர்ச்சொற்களின்

## சார்ட்டோடுகூட்டியவர்க்கம்.

| | |
|---|---|
| உயர்திணையாண்பாற்படர்க்கைப்பெயர் - | அவன். |
| உயர்திணைப்பெண்பாற்படர்க்கைப்பெயர் - | அவள். |
| உயர்திணைப்பலர்பாற்படர்க்கைப்பெயர் - | அவர். |
| அஃறிணையொன்றன்பாற்படர்க்கைப்பெயர் - - | அது. |
| அஃறிணைப்பலவின்பாற்படர்க்கைப்பெயர் - | அவை. |
| தன்மையொருமைப்பெயர் - | நான். |
| தன்மைப்பன்மைப்பெயர் - - - | நாம். |
| முன்னிலையொருமைப்பெயர் - - - | நீ. |
| முன்னிலைப்பன்மைப்பெயர். - - - | நீங்கள். |
| இடுகுறிப்பொதுப்பெயர் - - - | மரம். |
| இடுகுறிச்சிறப்புப்பெயர் - - | பனை. |
| காரணப்பொதுப்பெயர் - - - | அணி. |
| காரணச்சிறப்புப்பெயர் - - - | முடி. |
| காரணவிடுகுறிப்பெயர் - - | மரமன். |
| பொருட்பெயர் - - - | பொன்னன். |
| இடப்பெயர் - - - | மலையான். |
| காலப்பெயர் - - - - | வேனிலான். |
| சினைப்பெயர் - - - - | கண்ணன். |

## பெயர்கள்.

சினையாகுபெயர் - - - - - புளி.
தொழிலாகுபெயர் - - - - - புழுக்கல்,
அளவையாகுபெயர் - - - கால்-தடி.
சொல்லாகுபெயர் - மொழியுணர்ந்தான்.
தானியவாகுபெயர் - - - விளக்கு.
கருவியாகுபெயர் - - - திருவாய்மொழி.
கருத்தனாகுபெயர் - - திருவள்ளுவர்.
அடையடுத்தவாகுபெயர் - - - மருக்கொழுந்து,
விடாதவாகுபெயர்-காகத்தினின்றுந்தயிரைக்காக்குக
விட்டவாகுபெயர் - கங்கைக்கண்ணிடைச்சேரி.
விட்டும்விடாதவாகுபெயர் - - அவனிவன்.
இருமடியாகுபெயர் - - - கார்நெல்.
மும்மடியாகுபெயர் - - - காரறுத்தது.
எண்ணலளவையாகுபெயர் - - - ஒன்று.
முகத்தலளவையாகுபெயர் - - மரக்கால்.
நீட்டலளவையாகுபெயர் - - தடி-கெஜம்.
எடுத்தலளவையாகுபெயர் - - துலாம்
நிகழ்காலவினையாலணையும்பெயர் - வருகிறவன்,
இறந்தகாலவினையாலணையும்பெயர் - வந்தவன்.
எதிர்காலவினையாலணையும்பெயர் - வருபவன்.
குறிப்புவினைப்பெயர் - - - பெரிது

# பெயர்கள்.

குணப்பெயர் - - - - நல்லவன்.
சேய்மைச்சுட்டுப்பெயர் - - - அது.
அண்மைச்சுட்டுப்பெயர் - - - இது.
வினாப்பெயர் - - - - எவன்.
ஆண்பாற்பெயர் - - - - மனிதன்.
பெண்பாற்பெயர் - - - - மனுஷி.
முதற்பெயர் - - - - சாத்தன்.
எண்ணுப்பெயர் - - - - ஒருவன்.
ஆண்மைச்சினைப்பெயர் - - முடவன்.
பெண்மைச்சினைப்பெயர் - - - முடத்தி.
ஒருமைச்சினைப்பெயர் - - - செவியிலி.
பன்மைச்சினைப்பெயர் - - செவியிலிகள்.
சினைமுதற்பெயர் - - முடக்கொற்றன்.
ஆண்மைமுறைப்பெயர் - - - தந்தை.
பெண்மைமுறைப்பெயர் - - - தாய்.
பால்பகாவஃறிணைப்பெயர் - - மரம்.
குழூஉப்பெயர் - - - அவையத்தார்.
ஆகுபெயர் - - - - எழுத்து.
பொருளாகுபெயர் - - - தாமரை.
இடவாகுபெயர் - - - அகம்.
காலவாகுபெயர் - - - - - கார்.

# பிழை திருத்தம்.

| பிழை | திருத்தம். | பக்கம் | வரி |
|---|---|---|---|
| வற் - - | வரு - - - | ௨௭ | ௪ |
| டலய - - | டய - - - | ௨௯ | ௫ |
| ஆகரம் - - | அகரம் - - | ௫0 | ௨ |
| இற்ற - - | ஈற்ற - - | ௫௬ | ௨ |
| இற்ற - - | ஈற்ற - - | ௫0 | ௪ |
| மர - - - | மார் - - | ௫௫ | ௧௨ |
| பல்லு - - | புல்லு - - | ௫௮ | ௧௧ |
| லி - - - | லீரு - - | ௫௯ | ௭ |
| கப் - - - | கம் - - - | ௬௫ | ௫ |
| கைய்யர - | கையர - - | ௬௪ | ௮ |

ஸ்ரீ

இராமஜயம்.

# விபக்திபோதினி

## வேற்றுமையியல்.

எழுவாய் ஐமுதலிய வுருபுகளேற் காமனிற்கும் பெயராம்.

அது-வினை-பெயர்-வினாவைக்கொண்டுமுடியும்.

- உதாரணம்.

| | | |
|---|---|---|
| ஆ | கிடந்தது - | வினைகொண்டது. |
| ஆ | பல- | பெயர்கொண்டது. |
| ஆ | யாது- | வினாக்கொண்டது. |

மற்றுமிங்ஙனம்- வருமாறறிக.

இவற்றுள்- -ஆ- எழுவாய்.

இரண்டனுருபு -ஐ- என்பதாம்.

அது, ஆக்கல், அழித்தல, அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை-முதலிய, பொருள்களில், வரும.

வரலாறு.

குடத்தை, வனைந்தான், ஆக்கல்.

| | |
|---|---|
| குடத்தையுடைத்தான்- | அழித்தல். |
| ——யடைந்தான்- | அடைதல். |
| ——த்துறந்தான்- | நீத்தல். |
| ——யொத்தான்- | ஒத்தல். |
| ——யுடையான் | உடைமை. |

மற்றுமிங்ஙனம்வருதலறிக.

மூன்றனுருபு-ஆல்-ஆன்-ஒடு-ஓடு-இந்நான்குமாம். இது, முன்னிரண்டுருபுங்கருவிப் பொருளிலுங்கருத்தாப்பொருளிலும் - பின்னிரண்டுருபும் - உடனிகழ்ச்சிப்பொருளிலும்வரும்.

வ-று.

| | |
|---|---|
| வாளால் வெட்டினன்<br>வாளான் வெட்டினன் | கருவி. |
| அரசனாலாகிய கோயில்<br>அரசனானாகிய கோயில் | கருத்தா. |
| ஆசிரியனொடுமாணாக்கன்வந்தான்<br>ஆசிரியனோடுமாணாக்கன்வந்தான் | உடனிகழ்ச்சி. |

மற்றுமிவ்வாறுவருதலறிக.

நான்கனுருபு-கு, ஒன்றேயாம், அது, கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை

முதலியபொருள்களில்வரும்,

வ-று.

இரப்போர்க்குக்கொடுத்தான், கொடை.
பிணிக்குமருந்து, பகை.

விளக்கிற்கெண்ணெய்-நேர்ச்சி-அல்லதுகட்டு.

தவத்துக்குப்பொறை- தகுதி.
ஆடைக்குநூல்- அதுவாதல.
கூலிக்குவேலை- பொருட்டு.
சாத்தற்குமகன்- முறை.

மற்றுமிவ்வாறுவருதலறிக.

ஐந்தனுருபு-இன்-இல்-என்பனவாம்,

இது-நீக்கல்-ஒப்பு-எல்லை-ஏது-என்னும்பொருள்களில்வரும்.

வ-று.

மலையினீங்கினான்- நீக்கல்.
பாலின்வெளிதுகொக்கு- ஒப்பு.
மதுரையின்வடக்குச்சிதம்பரம்- எல்லை.
மண்ணிற்செய்தபானை- ஏது.

## இல்லுருபுமிவ்வாறொட்டுக.

ஆறும்வேற்றுமையுருபு-அது-ஆது-அ-என்பனவாம்.

அது தொடர்மொழிப்பொருளை, உடையபொருளில்வரும்,தொடர்மொழிப்பொருளொன்றாயின்-அது ஆது - இவ்விரண்டும்வரும் - தொடர் மொழிப்பொருள்பலவாயின் அகரவுருபுவரும்-ஆது -அ- இவ்விரண்டுஞ்செய்யுளில்வரும்.

வ-று.

சாத்தனது தலை.
சாத்தனாது தலை.
சாத்தனதலைகள்-என வரும்.

மற்றுமிவ்வாறு வருதலறிக-இங்கே தொடர்மொழிப்பொருள் -தலை-அதை யுடையபொருள் - சாத்தனென்பது.

ஏழாம்வேற்றுமை யுருபு-இல்-கண்-கால் -கடை-முதலியவாம்.

அது தொடர் மொழிப்பொருட்கிடப்பொருளில் வரும்.

வ-று.

கைபிற்கடகம், கைக்கண்விரல், எ-ம்-இங்கேதொடர்மொழிப்பொருள்-கடகமும்-விரலும்-அவற்றிற்கிடப்பொருள்-கையென்பது.

எட்டாம்வேற்றுமையுருபுகள் -ஏ-ஓ-ஆ- என்பனவாம்.

அது படர்க்கைப்பெயரீற்றின்றிரிபும்-கேடும் மிகலும்-ஈற்றினயலின்றதன்றிரிபும் -இயல்பும்-விளியுருபுகளாம்.

வ-று.

இராமனேவா.
இராமோ.
இராமா -எ-ம்.

உ-வது

அரிதுணர்வேற்றுமையியல்.

செயப்படுபொருண் முதலியபொருள்கள்வினைமுதற்பொருளாதலுமுண்டு.

வ-று.

அடுவென்பது முதலிய முதனிலைகட்குநெகிழ்ச்சி முதலிய பயனையுண்டாக்குகிற தொழில் பொருளாம்.

அந்நெகிழ்ச்சியை யுண்டாக்குந் தொழில் பலவகைப்படும் எங்ஙனமெனின் நெருப்பு மூட்டன்முதலாகிய சாத்தன் றொழிலும் நெருப்பைக்கொள்ளுதன் முதலியவிறகின்றொழிலும் செய்யப்படுபொருளைத்தரித்தன் முதலியபானையின்றொழிலும் - பானையுளிருத்தலு நெருப்பை யேற்றலுமுதலியவரிசியின்றொழிலுமாக விவ்வாறுபலவகையாதல்காண்க.

எளிதிலடப் பட்டதென்னும் பொருளைத்தோன்றுவித்தற்குச்சாத்தன் றொழிலைக்கருதாமல் விறகு அரிசி-பானை- முதலியவற்றின்றொழில்களிலேத்தொழில் கருதிக்கூறப்படுமேலவத்தொழிற்கிடமான விறகு முதலியபொருள் வினைமுதற்பொருளாம்.

உ-ம்.

அரிசிதானேயட்டது.
விறகுசோறட்டது.
பானை சோறட்டது-எ-ம்.

பாணங்கொன்றதுஎனமற்று மிங்ஙனம் வருவவெல்லாமறிக.

ஐ-முதலியவாறுருபுகள் செய்யுளிற்சிலவிடத்து ஐ-யுருபு-அ-எம்-ஆனுருபு-ஆன-எம்-குவ்வுருபு-க-எம்: திரிதலுமுண்டு.

# விபத்திபோதினி.

அஃறிணைப்பெயரிறுதியில்-ஆறனுருபுமாத்திரமவ் வாறுதிரியும்-மற்றை-ஐயுங்குவ்வுந்திரியா.

உ-ம்.

காவலோனை-என்பதற்கு-காவலோன-எம்-புலவ ரான்என்பதற்கு-புலவரான-எ-ம்- ஆசிரியற்கு-என்ப தற்கு- ஆசிரியற்க - எ - ம - உயர்திணைப்பெயரிறுதி யிற்றிரிந்தன காண்க-புள்ளினை - என்பதற்கு- புள்ளி ன- எனவஃறிணைப் பெயரிறுதியிலோருரு பேதிரி ந்தது காண்க.

உருபுகளுள்-வினைமுதல்-செயப்படுபொருள்-கார ணம்-கோளி-நீக்கம்-இடம்-|இப்பொருளில்வரு முரு புகள்வினைகொண்டுமுடியும்-எல்லைப்பொருளிலும்- கி ழமைப்பொருளிலுமுறையேவருகின்ற ஐந்தனுருபும்- ஆறனுருபும்- பெயரைக்கொண்டு முடியும்- மற்றைப் பொருளில் வருமுருபுகளேற்றவாறு பெயரையேனும் வினையையேனுங்கொண்டுமுடியும். எழுவாய்வினைமுத ல்-வினையைகொள்ளுதலன்றிச்சிறுபான்மைபெயரை யும வினாவையுங்கொள்ளும்.

இன்னணம்வருதலவற்றிற்குமுற்கூறிய வுதாரணங் களுட்கண்டுகொள்க.

ஐமுதலிய வாறுருபும்பெயர்களுடனேயுருபுகள் புணரும்போது இடையிற் சாரியை யென்னு மிடைச் சொல்வருதலுஞ் சிலவிகாரப்படுதலுமுண்டு.

அச்சாரியைஅன்-ஆன்-இன்-அல்-அற்று-இற்று-அத்து -அம்-தம்-நம்-நும்-எ-அ-உ-ஐ-கு-ன்-முதலிய வாம்.

உயிருமெய்யுமாகிய வெல்லாவீற்றமோடு முருபுகள்புணருங்கால்-இன்னுருபல்லாதமற்றை ஐந்துருபும் புணருங்காற் பெரும்பாலும்-இன்சாரியையே தோன்றும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| விள - ஐ- | | விளவினை- |
| ஆல- | — | விளவினால- |
| கு- | — | விளவிற்கு- |
| அது- | — | விளவினது- |
| கண்- | — | விளவின்கண் |

பலா-புளி-தீ-கடு-பூ- சே- தினை-சோ-வெள- உரிஞ்-மண்-பொருந் - திரும்- வேய்-வேர் கல்-தெவ்-யாழ்,முள்-பொன்-நாகு-என்பவற்றோடு மிவ்வாறொட்டுக.

இவ்வீறுகளுள்-மக-நிலா-என்பன இன்சாரியை பெறுதலுமன்றி அத்துச்சாரியையும்பெறும்.

உ-ம்.

மக- -ஐ- — மகவினை-மகத்தை.
நிலா- -ஐ- — நிலாவினை-நிலாத்தை.

ஆல்-கு-அது-கண்-என்பவற்றோடுமிவ்வாறொட்டுக.

விள-பலா-என்னு மரப்பெயர் ஏழனுருபோடு புணருங்கால,இன்சாரியை பெறுதலுமன்றி யத்துச்சாரியையும் பெறும்.

உ-ம்.

விள-கண்- — விளவின்கண்-
விளவத்துக்கண். —
பலா-கண் — பலாவின்-கண்-
பலாவத்துக்கண்- — எனவருதல்-

ஆ-மா-கோ- என்னுமிம்மூன்றும் இன்னே யன்றி னகரவொற்றாகியுகரச்சாரியையும் பெறும-குவ்வுருபிம் னகரச்சாரியையோடுகரச்சாரியை யும்- னகரச்சாரியை யின்றி-உகரச்சாரியையும்வரும.

உ-ம்.

ஆ -ஐ- ஆவினை- ஆனை.

ஆல்-ஆவினால்- ஆனால்.

கு -ஆவிற்கு -ஆனுக்கு- ஆவுக்கு.

இன்-ஆவின்- ஆனின்.

அது-ஆவினது- ஆனது.

கண்-ஆவின்கண்- ஆன்கண். எ-ம்.

மற்றவற்றோடுமின்னனமொட்டுக.

சாரியையின்றியும்-ஆவை-மாவை-கோவை- எனவும்வரும்-மா-இங்கேவிலங்கு-கோ-இறைவன்.

ஊ- என்பதும்-னகரச்சாரியைபெறும்.

உ-ம்.

ஊ -ஐ- ஊனை.

ஊ- ஆல் — ஊனால்-எ-ம்.

மற்றுமிவ்வாறொட்டுக.

ஊ வினையென-னகரச்சாரியை மேலின்சாரியையேற்கும். ஊவினை என-ஞலாது.

சிறிய-பெரிய-அரிய-எளிய-சில-பல-முதலிய் அகரவீற்றஃறிணைப்பெயர்கள் அற்றுச்சாரியைபெறும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| சிறிய | -ஐ- | சிறியவற்றை. |
| பெரிய | -ஐ- | பெரியவற்றை. |
| அரிய | -ஐ- | அரியவற்றை. |
| எளிய | -ஐ- | எளியவற்றை. |
| சில | -ஐ- | சிலவற்றை. |
| பல- | -ஐ- | பலவற்றை. |

மற்றையுருபோடுமிக்ஙனமொட்டுக.

யாவென்னுமஃறிணைப்பெயரும்-அற்றுச்சாரியையேபெறும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| யா - | ஐ- | யாவற்றை. |
| யா- | ஒடு- | யாவற்றோடு. |

பிறவுருபுகளோடுமிக்ஙனமொட்டுக.

அது-இது-உது-என்னுஞ்சுட்டும்-எது-ஏது-யாது என்னும்வினாவும்உருபேறுங்கால்அன்சாரியைபெறுதலுமுண்டு.

உ-ம்.

| | | |
|---|---|---|
| அது- ஐ- | — | அதனை. |
| ஆல்- | — | அதனால. |
| கு- | — | அதற்கு. |
| இன்- | — | அதனின். |
| அது- | — | அதனது. |
| கண்- | — | அதன்கண். -எ-ம. |

மற்றவற்றோடுமின்னனமொட்டுக.

அன்சாரியை பெறுமிடத்து யாதை-யாதால்என வியல் பாவனவறிக.

அஃது- இஃது- உஃது என்பவை யுருபுகளோற் குங்கால் அன்சாரியைபெறுதலுமுண்டு பெறுங்காலி டைநின்றவாய்தங்கெடும்.

உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| அஃது- | -ஐ- | — | அதனை. |
| இஃது- | -ஐ- | — | இதனை. |
| உஃது- | -ஐ- | — | உதனை. |

மற்றவற்றோடுமின்னனமொட்டுக.

அன்சாரியை பெறுமிடத்து- அஃதை-இஃதை- உஃதை-எனவியல்பாய் வருதலறிக.

ஒருபஃது-ஒருபது-முதலியஎட்டெண்கள் உரு புகளோடுபுணருங்காலத்து இடையேஆன்சாரியை வருதலுமுண்டு வருங்கால பகரவொற்று நிற்கமற்றை-அஃது-அது- என்பனகெடும்.

உ-ம்.

ஒருபஃது- -ஐ- — ஒருபானை;
ஒருபது- -ஐ- — ஒருபானை.
இருபஃதுஇருபதுமுதலியவற்றோடு
மிங்ஙனமொட்டுக.

ஆன்சாரியை பெறுவிடத்து ஒருபஃதை-ஒருபதை- எனவும்வரும் மற்றுமிங்ஙனம் வருவனவறிக.

முற்கூறியவாங்குஆன்சாரியைவரின் பகரவொற்றுநிற்கமற்றை- அஃது-அது-என்பனகெடும்.

உ-ம்.

ஒன்பஃது- -ஐ- — ஒன்பானை.
ஒன்பது- -ஐ- — ஒன்பானை. எ-ம்.
மற்றுமிங்ஙனமொட்டுக.

ஆன்சாரியை பெறுவிடத்து ஒன்பஃதை- ஒன்பதையெனமற்றுமிங்ஙனமியல்பாதலறிக.

அவைஇவை-உவை- என்னுஞ் சுட்டோடும்- எவை என்னும வினாவோடுமுருபுகள்புணருங்காலிடையே அற்றுச்சாரியை தோன்றலும- அற்றுச்சாரியை தோன்றுங்காலீற்றை காரங்கெடுதலு மிவ்விருமையும் பெறும்- நான்கனுருபுமேழனுருபும்புணருங்கால்அற்றுச்சாரியை மேலின்சாரியையுந் தோன்றும.

மற்றுமிவ்வாறொட்டுக.

உ-ம்.

அவை- -ஐ-.— அவையற்றை-அவற்றை.
ஆல்- — அவையற்றால்-அவற்றால்.
இன்- — அவையற்றின்-அவற்றின்.
அது- — அவையற்றது-அவற்றது.

எனவீற்றை காரங்கெடாதுங் கெட்டும் அற்றுச் சாரியைதோன்றிற்று.

அவை- -கு- அவையற்றிற்கு-அவற்றிற்கு:
கண்- அவையற்றின்கண்-அவற்றின்கண்.

என அற்றுச்சாரியைமேலின்சாரியை தோன்றி னதுமறிக.

அவையிற்றிற்கு எனவும்வரும்.

யாவையென்னுமைகார விற்றுவினைப் பெயர்-ஈற்றைகாரங்கெட்டுஅற்றுப்பெற்றுமுடியும.-குவ்வோடும-கண்ணோடுமின்னும் பெறும.

உ-ம்.

யாவை- -ஐ- யாவற்றை.
ஆல்- — யாவற்றால்.
இன- — யாவற்றின்.
அது- — யாவற்றது.
கு- — யாவற்றிற்கு.
கண்- யாவற்றின்கண். -எ-ம்,

கரியவை நெடியவைமுதலியபண்புகொள்பெயர்கள் ஈற்றைகெட்டு-அற்றுச்சாரியைபெறும்-கு-கண்-இவற்றிற்கு இன்சாரியையும்வரும்.

உ-ம்.

கரியவை- -ஐ- கரியவற்றை.
ஒடு- — கரியவற்றொடு.
இன்- — கரியவற்றின்.
அது- — கரியவற்றது.
கு- கரியவற்றிற்கு.
கண்- கரியவற்றின்கண். எ-ம்

பிறவுமிவ்வணமொட்டிக்காண்க.

கருமை நெடுமையென்பனமுதலிய பண்புப்பெயராதலின்கரியவை நெடியவை முதலிய பண்புகொள் பெயரெனப்பட்டன.

சிலமவ்வீற்றுப்பெயர்அத்துச்சாரியைபெறும்-பெறுங் காலீற்றுமகரமுஞ்சாரியையாயின்அகரமுங்கெடும்.

உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| மரம் | -ஐ- | | மரத்தை. |
| | ஆல்- | — | மரத்தால். |
| | கு- | — | மரத்துக்கு. |
| | இன்- | — | மரத்தின். |
| | அது- | — | மரத்தது. |
| | கண்- | — | மரத்துக்கண் -எ-ம். |

நகம்-குளமுதலியவற்றோடுமிவ்வணமொட்டுக.

னகரவீற்றுப்பெயருருபோடுபுணரின் இன்சாரியையைப்பெறுதலேயன்றி அத்துச்சாரியைபெறும்- இது பெறுங் காலபெயரீற்று னகரமுஞ்சாரியையின் அகரமுங்கெடும.

உ-ம்.

| | | |
|---|---|---|
| அழன் | -ஐ- | அழனினை-அழத்தை. |
| புழன் | -ஐ- | புழனினை-புழத்தை. |

ஆல்-முதலியவற்றோடுமிங்ஙனமொட்டுக.

எகினோடும் - இன்னையன்றி அத்துச்சாரியையும் பெறும்பெறுங்கால் பெயரீற்று னகாரமுஞ்சாரியையா யின் அகரமுங்கெடா.

உ-ம்.

எகின்- ஐ- எகினினை-எகினத்தை.

மற்றையுருபுகளையுமிவ்வாறொட்டுக.

சில ழகரவீற்றுப்பெயர்களோடு - இன்னையன்றி அன்னும்பெறும்.

உ-ம்.

ஏழ் -ஐ- ஏழினை- ஏழனை.
ஆல்-ஏழினால்- ஏழனால்.

மற்றுமிங்ஙனமொட்டுக.

எல்லாமென்னும்பெயர்- அஃறிணைப்பொருளில் ஆறுருபுமேற்குங்கால்- மகரவொற்றுக்கெட்டு- அற்றுச் சாரியைதோன்றும்-உருபின்பின்னர் உம்மென்னுஞ்சா ரியையும்வரும்.

உ-ம்.

எல்லாம்-ஐ-எல்லாவற்றையுமென இப்படி வரும்.

இப்பெயருயர்திணைப்பொருளில் ஆறுருபுமேற் குங்காலிடையிலே அற்றுச்சாரியைவாராமல் நம்மென் னுஞ்சாரியைவரும்-உருபின்மேல்-உம்மென்னுஞ்சா ரியைமுற்கூறியவாறுவரும்.

உ-ம்.

எல்லாம் -ஐ-எல்லாநம்மையும் எல்லாம்-ஆல்-எ ல்லாநம்மாலும்,என இப்படிவரும். இவற்றற்கு முறை யேஎல்லாரையும்,எல்லாராலும் என்பவை முதலாகப் பொருளுரைக்க.

எல்லாருமென்பது- ஆறுருபுமேற்குங்காலீற்றி லிருக்கிற-உம்மென்பதுகெட்டுத்தம்மெனுஞ்சாரியை வ் ரும்-உருபின்மேல-உம்மென்னுஞ்சாரியைவரும்.

உ-ம்.

எல்லாரும்- -ஐ-எல்லார்தம்மையும்-எல்லாரும்- ஆல்-எல்லார்தம்மாலும்மற்று-மிங்ஙனமொட்டுக

எல்லாரையும் எல்லா ராலுமென. ஈற்றிலும்மை கெட்டும்பெறுமலும் வரும்.

எல்லீருமென்பது ஆறனுருபுமேற்குங்கால், உம்-கெட்டு- இடையே-நும்- சாரியைவரும் - உருபின்பின் -உம்முச்சாரியை முற்கூறியவாங்கேவரும்.

உ-ம்.

எல்லீரும்-ஐ-எல்லீர்நும்மையும்-எல்லீரும்-ஆல்-எல்லீர் நும்மாலும்- என இப்படிவரும்- மற்றுமிவ்வனை ஒட்டுக. உம்-கெட்டு-நும்பெறாமல்-எல்லீரையும்-எல்லீராலும்-எனவும்வரும்.

தான்- தாம்-நாம்-என்னும்பெயர்களுருபேற்குங்கால்முதலெழுத்துக்குறுகும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| தான் | -ஐ- | தன்னை. |
| தாம் | -ஐ- | தம்மை. |
| நாம் | -ஐ- | நம்மை. |

பிறவுருபோடுமிவ்வாறொட்டுக.

யான்-யாம்-என்பனவுருபேற்குங்கால் யான் -என்னெனவும்-யாம்-எம்மெனவுந்திரியும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| யான் | -ஐ- | என்னை. |
| யாம் | -ஐ- | எம்மை. |

மற்றுமிங்ஙனமொட்டுக.

நீ-நீர்உருபுகளேற்குங்கால்நீ-நின்னென்றும்-உன்னென்றும்-நீர்-நும்மென்றும்-உம்மென்றுந்திரியும்.

| | | | |
|---|---|---|---|
| நீ | -ஐ- | நின்னை-உன்னை. | |
| நீர் | -ஐ- | நும்மை-உம்மை | எ-ம். |

மற்றுமிங்ஙனமொட்டுக.

தான்-தாம்-நாம்-யான்-யாம்-நீ-நீர்- என்னும்பெயர்கள்-கு-என்னுநான்கனுருபுபுணருமிடத்து- இடையேஅகரச்சாரியைதோன்றும்- இச்சாரியையாகிய அகரத்தின்முன்னும்-அது- அ-என்னும்- ஆறனுருபின் அகரத்தின்முன்னுந்தனிக்குற்றொற்றிரட்டா.

உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| தான் | -கு- | தனக்கு | |
| | -அது- | தனது | |
| | -அ- | தன | எ-ம். |

மற்றுமிவ்வாறுவருனவறிக.

அவ்-இவ்-உவ்-எவ்-என்னுமிப்பெயர்களுருபேற்கும்போது-இடையில்-அற்றுச்சாரியைவரும.

உ-ம்.

அவ் -ஐ- அவற்றை-எ-ம்.

மற்றையுருபுகளையுமொட்டுக.

உருபுணர்ச்சிக்குக்கூறியசாரியைப்பேறு முதலியவிதி அவ்வுருபுதொக்கபொருட்புணர்ச் சிக்கண்ணுமவ்விதிவரும்.

அவை வருமாறு.

உருபுபுணர்ச்சியில- [சியில.
விளவினையென்பதுமுதலியபோல. பொருட்புணர்ச்

விள-கோடு- விளவின்கோடு
மூங்கா - கால்—மூங்காவின்கால்.
கிளி - சிறகு—கிளியின்சிறகு.

என-எல்லாவிடத்தேடுமின்சாரியைவரும்.

மகத்தை-நிலாத்தை என்பனபோல

மக- -கை- மகத்துக்கை.
நிலா- -கதிர்- நிலாத்துக்கதிர். எ-ம்-

விளவத்துக் கண-பலா வத்துக்துக் கண்-என்ப னபோல.

விள- -கோடு- விளவத்துக்கோடு.

பலா- -கோடு- பலாவத்துக்கோடு. எ-ம்.

யாவற்றை என்பது முதலிய-போல

யா- கோடு- யாவற்றுக் கோடுமுதலாகவின்ன னம்வரும்.

அவையற்றை என்பது முதலியபோல அவை-கோடு-அவை யற்றுக்கோடு-இவை. உவை- எனபவ ற்றோடு மிவ்வாறொட்டுக.

இவ்வாறுஉருபுபுணர்ச்சிக்கட்கூறியவாறு பொரு ட்புணர்ச்சிக்கண்ணுஞ்சொல்லிக்கொள்க.

விளிவேற்றுமைப்படர்க்கைப் பெயரீற்றின் றிரிபு ம்-கெடும்- மிகலும்-ஈற்றயனின்றதன்றிரிபும்- இயல்பு ம்-விளியுருபுகளாம்-விளித்தற்குக்கருவியான வேற்று மையுருபுவிளியெனப்பட்டது.உருபையேற்றபெயர்ப் பொருளிலிருக்கிற வுருபைத்தொடரும் வினைப்பொ ருளிலழைத்தேவப்படுவதாம்.

௨-ம்.

சாத்தா வாராய்- என்புழி - உருபையேற்றபெயர்ப்பொருள்- அழைக்கப்பட்ட சாத்தாவென்னும் பெயர்ப்பொருள்-உருபைத்தொடரும் வினைப்பொருள்- வருவாயென்பதில்-வருதல்- அவ்வருதலில்- சாத்தனை யேவுதல்- ஆயென்னும் விகுதியாற்றோன்றினமையமையால-சாத்தனிடத்திலிருக்கும்- அவ்வேவப்படுகையுருபின்பொருளாயிற்று.

உயர்திணைப்பெயர்களில்-இ-உ-ஊ-ஐ-ஓ-ன-ள-ர-ல-ய-என்னுமிப்பத்தீற்றுப்பெயரும் விளியுருபேற்கும்.

பொதுப்பெயர்களின்மேற்கூறியபத்திலுள்ஓகாரமும் ரகரவொற்று மொழித்துநின்றமற்றை எட்டோடு ஆகாரமும்-ணகரவொற்றுமானவிரண்டுங்கூடியபத்தீற்றுப்பெயரும் விளியுருபேற்கும்.

அஃறிணைப்பெயர்களில எகரமும் ஞகரவொற்றுக்கு மொழிந்த மற்றை யிருபத்தோரீற்றுப் பெயரும் விளியுருபேற்கும்.

இம்மூப்பெயர்க்கும் பெரும்பாலும்பொதுவா-

வுருபுகள் இடல்பாதலும் ஈற்றிலேமிகுதலும்-ஈற்றிகா ரீகாரமாகலும் விளியுருபாம்.

உ-ம்.

| | |
|---|---|
| முனிகூறுய்.<br>முனியேகூறுய் | உயர் திணைப்பெயர். |
| புறுக்கொடியை<br>புறுவே கொடியை | அஃறிணைப்பெயர். |
| பிதாக்கூறுய்<br>பிதாவேகூறுய் | பொதுப்பெயர். |

இம்மூவுருபு மினிவரும்விளிப்பெயர்க்கெல்லாம் பொதுவென்றறிக.

ஐகாரவீற்றுப்பொதுப்பெயர்கட்கு-ஐகாரம்-ஆ-எனத்திரிதலும்-ஆ-யெனத்திரிதலும் விளியுருபாம்.

உ-ம்.

அன்னை- அன்னய்கேள்,
அன்னுகேள்.

மற்றுமிவ்வாறுவருவனவறிக.

விட்லே-கங்கைமுதலியஉயர்திணைப்பெயர்கட்கு ஐ-ஆவெனத்திரிதல் விளியுருபாகும்.

உ-ம்.

| | |
|---|---|
| விடலை- | விடலாய்கேள். |
| நங்கை- | நங்காய்கேள்-எ-ம். |

மற்றுமிவ்வாறுவருவனவறிக,

நாரை-கொன்றைமுதலியஅஃறிணைப்பெயர்கட்கு முற்கூறிய வுயர்திணைப்பெயர்போலவேவிளியுருபாம்-

உ-ம்.

| | |
|---|---|
| நாரை- | நாராய்கேள். |
| கொன்றை- | கொன்றாய்கேள்-எ-ம், |

மற்றுமிவ்வாறறிக.

ளகரவீற்றுயர்திணைப் பெயர்களுள் சில-அள-பெழலும்- சிலவீறுகெடலும்-சிலவீற்றயனீளலும்-சிலவீற்றய னீண் டீறுகெடலும்- சிலவீற்றயனீண் டீற்கெட்டோகாரமிகலும்-சிலவிறுதிளகரவொற்று-யகரவொற்றாகத்திரிதலும்-சிலவிறுதிளகரவொற்று யகரவொற்றாகத்திரிந்து அயலில்ஆகாரமாயினும்அகரமாயி

றுமை ஓகாரமாய் ஏகார மிகலும் சிலவீறுகெட்டு அய லில் அகரம் ஏகாரமாதலும் விளியுருபாகும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| அம்பர்கிழான்- | அம்பர்கிழாஅன். | அளபெழுந்தன. |
| சோமான- | சோமாஅன். | |
| எலுவன்- | எலுவ. | ஈறழிந்தன. |
| தோழன்- | தோழ. | |
| நம்பன் - | நம்பான். | ஈற்றயனீண்டன. |
| பெருமன்- | பெருமான். | |
| இறைவன்- | இறைவா. | ஈற்றயனீண்டீறு கெட்டன. |
| மன்னன் - | மன்னா. | |
| ஐயன்- | ஐயாவோ. | ஓகாரமிக்கன. |
| அப்பன்- | அப்பாவோ. | |
| வாயிலான். | வாயிலாய். | னகரம்யகரமாயின. |
| ஆதிரையான்- | ஆதிரையாய். | |

வாயிலான்-வாயிலோயே இறுதினகரம்யகரவொற் றாகத் திரிந்து-ஈற்றயலாகாரமோகாரமாகத்திரிந்திறுதி யிலேகாரமிக்கது.

நாடுகிழவன்-நாடுகிழவோயே-மாயேன்- மாயோயே இறுதியகரவொற்றுமீற்றயலகரமோகாரமாயேகாரமியின்ன.

| | | |
|---|---|---|
| ஐயன் -ஐயே | } | இறுதிகெட்டலயலீகாரமேகாரமாயின, |
| முருகன் -முருகே | | |

ளகரவிற்றுயர்திணைப்பெயர்க்கு அளபெழலும் ஈறுகெடலும். ஈற்றயனீடலும்- இறுதிளகர்வொற்று யகரவொற்றுய்த்திரிதலும் - ஈற்றயல் அகரமேகாரமாதலும்விளியுருபாம்.

உ-ம்.

வேள்-வேஎள்-கேள- அளபெழுந்தது-எல்லாள்-எல்லீர்கேள்- ஈறுகெட்டது.

| | | |
|---|---|---|
| நமர்கள்-நமர்காள்கேண்மின் | } | ஈற்றயனீண்டன |
| எமர்கள்- எமாகாள்கேண்மின் | | |

| | | |
|---|---|---|
| குழையாள்-குழையாய்கேள். | } | ளகரயகரமாயின |
| வாயிலாள்-வாயிலாய்கேள. | | |

அடிகள்-அடிகேள்-ஈற்றயல்அகரம் ஏகாரமாயிற்று.

ரவ்விற்றுயர்திணைப்பெயர்க்கு -அளபெழலும்- ஈ

ற்றயல் அகரம் இகரமாதலும்-ஈகாரமாதலும்- ஈற்றயல் ஆகரம்இகரமாதலும்-இற்றயல்ஆகாரமீகாரமாதலும்-ஈற்றயல் ஆகாரம்ஈகாரமாதலும்- ஈற்றயல்ஆகாரமீகாரமாயீற்றிலேகாரமிகுதலும்- இற்றிலேகாரமிக்கு ஈற்றயலிலிருக்கிறயாகக்கெட்டு அதனயலிலிருக்கிற இகரம் ஈகாரமாதலும்-ஈற்றில்ஈகாரமிகுதலும்விளியுருபாகும்.

| | | |
|---|---|---|
| சிறார்- | சிறாஅர் | அளபெழுந்தன |
| மகார்- | மகாஅர். | |
| தெவ்வர்- | தெவ்விர்- | அகரமிகரமாயிற்று |
| வேந்தர்- | வேந்தீர்- | அகாரம்ஈகாரமாயின. |
| காய்கர் | காய்கீர் | |
| சான்றார்- | சான்றீர். | ஆகாரமீகாரமாயின. |
| மடவார்- | மடவீர். | |
| சான்றார் - | சான்றீரே. | ஆகாரமிக்குஅயல்யாக்கெட்டுஅதனயலிகரமீகாரமாயின. |
| கணியார். | கணியீரே. | |
| எமர்- | எமரீர். | ஈற்றிலீர்மிக்கன |
| தமர்- | தமரீர். | |

உயர் திணைப் பெயர்போல ரகரவிற்றுச் சிறப்பித்துச் சொல்லப்படும் அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் விளியுருபாகும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| கடலாரே- | கடலீரே. | அஃறிணைப்பெயர். |
| கழியாரே- | கழியீரே. | |

சாத்தியாரே- சாத்தியீரே- சாத்தீரே.

பொதுப்பெயர்.

லகரவிற்றுயர்திணைப்பெயர் அளபெழலும்- ஈற்றயனீளுதலும் விளியுருபாகும்

| | | |
|---|---|---|
| மால்- | மாஅல்கேள். | ஈற்றயன்மிகன. |
| தோன்றல்- | தோன்றால். | |
| மடவரல் - | மடவரால. | |
| தாழ்குழல்- | தாழ்குழாஅல். | |

யகரவிற்றுயர் திணைப் பெயர்க்கு அளபெழல் விளியுருபாகும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| சேய்- | சேஎய்கேள். | அளபெழுந்தன. |
| ஆய் - | ஆஅய்கேள். | |

னகரவீற்றஃறிணைப் பெயர்க்கும் இறுதிகெடுத லும் இறுதிகெட்டு ஈற்றயனீளலும் விளியுருபாகும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| அலவன்- | அலவ. | அஃறிணைப் பெயரீறுகெட்டன. |
| இகலன்- | இகல. | |
| அலவன்- | அலவா. | ஈறுகெட்டயனீண்டன. |
| இகலன்- | இகலா. | |
| சாத்தன்- | சாத்த. | பொதுப்பெயரீறு கெட்டன. |
| கொற்றன்- | கொற்ற. | |
| சாத்தன்- | சாத்தா. | ஈறுகெட்டயனீண்டன. |
| கொற்றன்- | கொற்றா. | |

ளவீற்றிரு வகைப்பெயர்க்கு மீற்றயனீளலும் விளியுருபாகும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| முயல்- | முயால். | அஃறிணைப் பெயரீற்றயனீண்டன. |
| கிளிகள்- | கிளிகாள். | |
| தூங்கல்- | தூங்கால். | பொதுப்பெயரீற்றயனீண்டன. |
| மக்கள்- | மக்காள். | |

இக்கூறியவிளியுருபுகளுள் இயல்பும்-ஈறழிவும்-அண்மைவிளிக்கண்ணும்-அளபெழல்-சேய்மைவிளிக்கண்ணும்-ஒகாரமிகல்-புலம்பற்கண்ணும்வரும்-மற்றைய இம்மூவகையிடத்துவரும்.

முற்கூறிய-பெயர்களில்-தமன்-தமள்-தமர்-நமன்-நமள்-நமர்-நுமன்-நுமள்-நுமர்-எமன்-எமள்-எமர்-தம்மான்-தம்மாள்-தம்மார்-நம்மான்-நம்மாள்-நம்மார்-நும்மான்-நும்மாள்-நும்மார்-யாவன்-யாவள்-யாவர்-யாது-யாவை-எவன்-எவள் எவர்-எது-ஏது-எவை-அவன்-அவள்-அவர்-அது-அவை-இவன்-இவள்-இவர்-இது-இவை-மற்றையான-மற்றையாள்-மற்றையார்-மற்றையது-மற்றையான்-மற்றையாள்-பிறன்-பிறள்-பிறிது-பிறர்-இவையெல்லாம்-விளிகொள்ளாப்பெயர்களாம்.

எம்மான்-என்பது -சிறுபான்மை-எம்மானேதோன்றி-னுய்-எ-ம்.

தமர் முதலானமொழிகள் கள்ளென்னும்இடைச்சொற்பெறுங்கால்- தமர்காள் எமர்காள்-எ-ம்- நமர்கள் என்பது-நமர்காள் -நமரங்காள்-எ-ம - இங்ஙனம்விளி பெறுதலுங்கொள்க.

௩-வது

## வேற்றுமைமயக்கவியல்.

இடுகுறியுங்காரணமுமாகியபெயர்கள் ஏற்கும் வேற்றுமைகள் எழுவாய்-அல்லது இரண்டாவது-மூன்றுவது-நான்காவது- ஐந்தாவது-ஆறுவது-ஏழாவது-எட்டாவது அல்லது- விளியெனவிவ்வெட்டேயாம்.

எழுவாய்வேற்றுமைக்குருபுஇரண்டாவதனுருபுமுதலியவேறுருபுகளேயேலாமலியல்பாகவிருக்கும்-அதற்குத்தன்ஜெழிலான்முடியும்வினைமுதற் பொருளாம்.

உ-ம்.

சாத்தன்வந்தான்-சாத்தன்பெரியன்-எ-ம்-இங்கே சாத்தனென்பது அதன்ஜெழிலாகியவருதலென்பதனை

ன்முடிந்ததனுல்-சாத்தன்வினைமுதற்பொருளாம்.

எழுவாயுருபுசிறுபான்மை பெயரைக்கொண்டு முடிதலுமுண்டு.

உ-ம்.

இதுபொருள்-இவனவன்-இவனெவன்-எ-ம்-

இவ்வெழுவாய் கொள்ளும்பெயர் பிறிதினியைபு நீக்கியவிசேடணப்பெயராயும் வினப்பெயராயும்வருமெனக்கொள்க.

இரண்டாம்வேற்றுமைக்குருபு -ஐ- ஒன்றேயாம். அவ்வுருபிற்குப்பொருள்- தன்னையேற்றபெயர்ப் பொருளிலிருக்கிறசெயப்படுபொருண்மை - அல்லது- கருமத்தன்மை.

செயப்படுபொருண்மை வினைமுதற்றொழிற்பயனுக்கிடமாகுகை-இடஞ்செயப்படுபொருள்.

சாத்தன்- { மரத்தைவளர்த்தான்.
மரத்தைவெட்டினுன்.
கோயிலைக்கட்டினுன்- . எ-ம்.

மரத்தைவளர்த்தானென்புழி-நீர்பெய்தன்முதலியசெயல்-வினைமுதற்றொழிலாம்.அதனாலுளவாகியபருத்தல்- தளிர்த்தன்முதலியகாரியமே பயனும்- அப்பயனுக் கிடமாமாதலான்- மரஞ்செயப்படுபொருளாம். அதிலிருக்கும்பயனுக்கிடமாகுகை-செயப்படு பொருண்மையாம்-ஆதலால்- வளர்த்தல்-என்பது- ஒன்றற்குப்பெருக்கத்தையுண்டாக்குந்தொழிலாயிற்று.

மரத்தைவெட்டினன் எ-ழி-வாளாலெறிதல்-வினைமுதற்றொழிலாம்-அதனாலுளதாகியபிளவாகுகைபயனாம-அப்பயனுக்கிட மரமாதலான்- மரஞ்செயப்படுபொருளாம்-அதிலிருக்கும்பயனுக்கிடமாகுகை-செயப்படுபொருண்மையாம்-ஆதலால்வெட்டலென்பது-ஒன்றற குப்பிளவாகுகையை யுண்டாக்குந்தொழிலாயிற்று.

கோயிலைக்கட்டினன் -எ-ழி-கல்லடுக்கன்முதலியசெயல்வினைமுதற்றொழிலாம் - அத்தொழிலாற்கோயிலுண்டாகுகைபயனும் - அப்பயனுக்கிடங்கோவிலாதலாற்-கோயில்செயப்படுபொருளாம்-அதிலிருக்கும் பயனுக்கிடமாகுகை- செயப்படுபொருண்மையாம்-ஆதலாலிங்கேகட்டலென்பது-ஒன்றற்கு-உற்பத்தியையுண்டாக்குந்தொழிலாயிற்று-சாத்தன்சேனையூர்தான்- சா

க்கனுட்டையடைந்தான்-எ-று-ஊர்தலும்- அடைதலு
-புணர்ச்சியையுண்டாக்குந்தொழில்.

குழையையுடையான்-எ-று-கொள்ளுகைமுதலிய
வியாபாரம-வினைமுதற்றொழில்-அதனால்-தனதாகுகை
கொள்ளுதலாலுளதாகியபயனும்-அப்பயனுக்கிடங் கு
ழையாதலால்- குழைசெயப்படுபொருளாம்.

குடத்தையொத்தான்-எ-று-உபமானமாகுகையா
கியவொத்தல்-வினைமுதற்றொழில்-அதனாலுளதாயபய
ன்உபமானமாகுகை-அதற்கிடங்குடமாதலால்-குடஞ்
செயப்படுபொருளாம்.

குடத்தைநீத்தான்-எ-று- தன்னுரிமையைக்கெடு
த்தலாகிய நீத்தல்-வினைமுதற்றொழில்-அதனாலுளதா
கியவுரிமைக்கேடுபயன்-அதற்கிடங்குடமாதலால்-குட
ஞ்-செயப்படுபொருள்.

இச்சையுஞானமும்-வினைமுதற்றொழிலாங் கால்
செயப்படுபொருண்மைவிடயமாகுகையாம்.

உ-ம்.

அறத்தைவிரும்பினான்- இச்சை.

நூலையறிந்தான்- ஞானம்.

இவற்றுள்-விரும்பினுன்-எ-ழி-விரும்புதற்கு அ
ம்விடயமாயிற்று-ஆதலால் அதிலிருக்கும்விடயமாகு
கையிரண்டனுருபின் பொருளாயிற்று.

அச்செயப் படுபொருண்மை இச்சிக்கப் பட்ட
தென்றும்-இச்சிக்கப்படாததென்றுமிருவகைப்படும்.

உ-ம்.

புல்லைமிதித்து நெறியைச் சென்றுன்.
பதரையுநெல்லையும்பணத்திற்குக்கொண்டான்.
கத்திரிக்காயையும்-புழுவையுங்கறித்தான்-எ-ம்.

இவற்றில.

பல்லுமிதிக்கப்படுவதாகவும்- பதர்கொள்ளப்படுவதா
கவும்-புழுக்கறிக்கப்படுவதாகவும்-வினைமுதலாலிச்சிக
கப்படாத செயப்படுபொருளாம்- நெறி-நடக்கப்படுவ
தாகவும்-நெல்-கொள்ளப்படுவதாகவும்-கத்திரிக்காய்-க
றிக்கப்படுவதாகவும்- வினைமுதலாலிச்சிக்கப்பட்டெ
யப்படு பொருளாம்- இவ்வாறு செயப்படு பொருள்
களைப்பகுத்துணர்க.

இயற்றும் வினைமுதற் றொழின்-முதனிலைமேல்-வி-பி-முதலிய வந்தாலியற்றும் வினைமுதற் பொருள் செயப்படுபொருளாம்.

உ-ம்.

பகவரைத்துறக்கத்தையடைவித்தான்.

மாணாக்கனை நூலையறிவித்தான்.

நிலத்தைநீரிலிரிப்பித்தான்.

கொற்றன்சாத்தனைப் போக்கினான். -எம்.

இவ்வுதாரணங் களில்-அடைதல்-அறிதல்-இருத்தல்-போதல்- என்னுமித்தொழிலில்- கருத்தாவாகிய பொருள்கள்-அத்தொழின்முதனிலைமேல்-வி-பி- முதலிய வந்தமையா லிரண்டனுருபேற்றுச் செயப்படுபொருளானமைகாண்க-வி-பி- முதலியவைதொழிலையுண்டாக்குந்தொழிற்பொருளில்வரும்.

வி-பி-முதலிய-பிறவினை முதனிலைமேல் வரின்-இயற்றும் வினைமுதற்றொழிலின் செயப்படுபொருளோடியற்றும் வினைமுதலுஞ் செயப்படுபொருளாதலாற் செயப்படுபொருளிரண்டுவருமென்றும்- அ

வைதன் வினைமுதனிலை மேல்வரின் இயற்றும் வினைமுதலொன்றேசெயப்படுபொருளாதலாற் செயப்படு பொருளொன்றே வருமென்றுணர்க.

சிலவிடத்து- இயற்றும் வினைமுதல்- அங்ஙனஞ் செயப்படுபொருளாகாதமூன்றனுருபேற்று வினைமுதலாகவேநிற்றலுமுண்டு.

உ-ம்,

சாத்தன்கொற்றனாற்சோற்றையடுவித்தான்-இங்கேகொற்றனென்னுமியற்று வினைமுதற்றொழிலாகிய -அடு-எனுந்தொழின்முதனிலைமேல -வி- எனும்விகுதி-வந்தவழி இயற்றும்வினைமுத லிரண்டனுருபேலாது மூன்றனுருபேற்றதுகாண்க.

முதனிலைமேல்-வி-பி- முதலியவை வாராமற்சில விடத்துச்செயப்படுபொருளிரண்டு வருதலுமுண்டு.

உ-ம்.

பசுவைப் பாலைக்கறந்தான்.

பலியைப்பூமியையிரந்தான்.

யானையைக் கோட்டைக்குறைத்தான்-எ-ம்.

இவற்றுள்- கறத்தலாவதுஉள்ளிருக்குநெகிழ்ச்சிப் பொருட்பிரிவை யுண்டாக்குந்தொழிலே-யுண்டாககுந்தொழில்-ஆதலால்-வினைமுதற் றொழிற்பயனிரண்டாகவே-அப்பயனுக்கிடமாகிய செயப்படு பொருளுமிரண்டாயின-எங்ஙனமெனின்-உள்ளிருக்கு நெகிழ்ச்சிப்பொருள்-பால்-அப்பாற்குப் பசுவிற்கும்- பிரிவையுண்டாக்குந் தொழில்-பாலிலிருக்கும் வீழ்ச்சி அவ்வீழ்ச்சியையுண்டாக்குந் தொழில் முலைபற்றி யுருவல் இவற்றுள்-வீழ்ச்சித்தொழிலானுண்டாகிய பயனுக்கிடம் பசுவெனவும்-முலைபற்றி யுருவற் றொழிலானுண்டாகியவீழ்ச்சியாகியபயனுக்கிடம் பாலெனவு மறிக.

இரத்தலாவது- உரிமைக்கேட்டையுண்டாக்குந் தானத்தை யுண்டாக்குங் கொடுவென்னுந் தொழிலாம் ஆதலால்-வினைமுதற்றொழிற்பயனிரண்டாகவே யவற்றிற்கிடமானசெயப்படுபொருளுமிரண்டாயின.

குறைத்தலாவது- இங்கே பிரிவையுண்டாக்கு- தொழிலையுண்டாக்குந்தொழில்.

பசு-பலி-யானை- இப்பொருள்களைச் செய்ப்படு பொருளாகக்கருதாமல்-நீக்கப் பொருளாகக் கருதினை ந்தனுருபும்- சம்பந்தப்பொருளாகக் கருதினாற னுருபும்வரும்.

உ-ம்,

பசுவினின்றும் பாலைக்கறந்தான்.

பசுவினது பாலைக்கறந்தான்.

பலியினின்றும் பூமியையிரந்தான்.

பலியினது பூமியையிரந்தான்,

யானையினது கோட்டைக்குறைத்தான்.

யானையினின்றுங்கோட்டைக்குறைத்தான-எ-ம் முதற்பொருளி லிரண்டனுருபுவருங்கால் சினைப்பொருளிலுமிரண்டனுருபுவருதலன்றி ஏழனுருபும்வரும்.

உ-ம்.

யானையைக்கோட்டின்கட்குறைத்தான்- மரத்தைச்சினையிற்குறைத்தான்-எ-ம்.

பயனுந்தொழிலுமொருபொருளி லிருக்குங்காலப்பொருள்வினைமுதற்பொருளெனப்படும்.

வ-று.

சாத்தனூரையடைந்தான்-எ-ழி-ஊரின்புணர்ச்சி யாகியபயனுக்கும்-அப்பயனையுண்டாக்கும்போதலாகி யதொழிற்கு மிடமானசாத்தன்-வினைமுதற்செயப்படு பொருளெனப்படும்-எனவேபயனுக்குமாத்திரமிடமா னபொருளே-செயப்படுபொருளெனப்படும்.

நான்கனுருபின்பொருளாகியகோளிப் பொருளி லும்-ஐந்தனுருபின்பொருளாகிய நீக்கப்பொருளிலும்- ஏழனுருபின்பொருளாகியவிடப்பொருளிலும்-இரண் டனுருபுவருதலுமுண்டு.

உ-ம்.

தௌவையைக்காட்டிவிடும்-எ-ம்.

நினைப்பானை நீங்குந்திரு-எ-ம்.

நெறியைச்சென்றான்-எ-ம்.

இவற்றிற்கு.

தௌவைக்குக்காட்டிவிடுமெனவும்- நினைப்பானி னீங்குந்திருவெனவும்-நெறியிற்சென்றானெனவும்-பொ ருள்கொளவேண்டுதலின் முறையேகோளிப்பொருளை

னவும்- நீக்கப்பொருளெனவு மிடப்பொருளெனவும்-பட்டன-

மூன்றாம்வேற்றுமைக்குருபு-ஆல்-ஆன்-ஓடு-ஒடென்னுநான்குமாம்.

இந்நான்கனுண்முதலிரண்டுருபிற்கும்-உருபையேற்றபெயர்ப் பொருளிருக்கிற வினைமுதற்பொருண்மையுங்-காரணப்பொருண்மையும்- அவயவிவிசேடணத்திற்கவயவசம்பந்தப்பொருளும்-ஞானத்தோற்றஞானவிடயமாதற்பொருளும்-தொறுப்பொருளும்-ஒற்றுமை-முதலியபொருளுமாகியவாறும்பிறவுமாம்.

அவற்றுள் வினைமுதற்பொருண்மைஉருபையேற்றபெயர்ப்பொருளைமுடிக்குந் தொழிலுக்கிடமாகுகை.

உ-ம்.

குயவனாற்பானைசெய்யப்பட்டது-எ-ம்.

இங்கேகுயவனென்பது செய்தலெனனுந்தன்றொழிலான் முடிந்தத்தொழிலுக்கிடமாயிற்று-ஆனுருபேற்று மிவ்வாறொட்டுக.

வினைமுதல்- தன்னைமுடிக்கும் வினைவிகுதியாற் சொல்லப் படின்- எழுவாய்க் கருத்தாவாம்- வினைமுதல்-அவ்வினை-விகுதியாற்சொல்லப் படாவிடின் மூன்றனுருபின் கருத்தாவாம்.

சாத்தன்வந்தான்-எ-றி-வந்தானெனத்தன்னை முடிக்குஞ்சொல்லினீற்று-ஆன்விகுதியாற்சாத்தன்-என்பது-சொல்லப் பட்டது-ஆதலால் அஃதுஎழுவாய்க்கருத்தனுட்-இதைவட நூலார் அபியிதகருத்தாவென்பர்,

குயவனாற்பானை செய்யப்பட்டது-எ-றி-

குயவனென்னுமவினைமுதல்-வினைச்சொல்லிற்று த்-தவ்விகுதியாற்சொலலப்படாமல்-முதனிலைத்தொழிலாகியதன்றொழிலான்முடிந்தது-ஆதலால்அது மூன்றனுருபின்கருத்தனும்-இதைவட நூலார்-அநபியிதகருத்தாவென்பர்-எழுவாய்க் கருத்தனு- மூன்றனுருபின்கருத்தனு- மியற்றுங்கருத்தனை ஏவுகிறகருத்தனுக்குங்கால்-ஏதுக்கருத்தாவெனப்படும்,

உ-ம்-

அரசன்றச்சனாற்றேர்செய்வித்தான்-

இஃதெழுவாய்க்கருத்தன்-

அரசன்றச்சனாற்றேர்செய்விக்கப்பட்டது-

இதுமூன்றனுருபின்கருத்தன்-

இவ்வுதாரணமிரண்டினும்-அரசனேவுதற்கருத்தி னாதலால்-அரசனேதுக்கருத்தன்-அல்லது-ஏவும்வினை முதல்-தச்சனியற்றுதற்கருத்தனும்.இதைவடநூலார். பிரயோச்சியகருத்தனென்பர்.

மூன்றனுருபின்வினைமுதற்பொருளிற் செயப்படு பொருளிரண்டனுருபேலாது-எழுவாய் போனின்றுத ன்னைமுடிக்கும் வினைவிகுதியாற்சொல்லப்படும்

உ-ம்-

ஆசிரியனான் மாணாக்கன்கற்பிக்கப்பட்டான்-என-றிர் இங்கேமாணாக்கன் என்னுங்கருமம்-எழுவாயாக நின்றுதன்னைமுடிக்கும்- கற்பித்தலென்னும்வினைவிகு தி யானிடு-படுவென்பதாற் சொல்லப்பட்டது.

மூன்றனுருபின்வினைமுதற்பொருளிற் செயப்படுபொருளிரண்டுவருங்காலிரண்டுமெழுவாயாக நில்லவினைவிகுதியாற்சொல்லப்பட்டசெயப்படுபொருளொன்றேயெழுவாயாகநிற்கும்-வினைவிகுதியாற் சொல்லப்படாததிரண்டனுருபேற்கும்.

உ-ம்

அரசனாற்பகைவர்துறக்கத்தையடை விக்கப்பட்டார்-பசுபாலைக்கறக்கப்பட்டது-இவ்[illegible]-படு-என்னும் விகுதியால்-பகைவர்-பசு-என்பவையிரண்டுஞ் சொல்லப்பட்டன-வாதலாலிரண்டுமெழுவாயாகநின்றன-துறக்கமும்-பாலுமவ்வாறு சொல்லப்படாமையா லிரண்டனுருபேற்றன.

காரியந்தோன்றுதற் கேதுவாயதற்குமுற் காலத்திருப்பதுகாரணம்.

அது-காரணம்-ஏது-என-இருவகைப்படும்.

வினையொடுமுடிந்துதன்னை முடித்தவினையாளாகிப்பயனையுண்டாக்குந்தொழிலையுடையதுகாரணம்.

உ-ம்.

பாணத்தாற்கொன்றான்-எ-ம்-இங்கேபாணங்கொல்லலென்னும்வினைகொண்டுமுடிக்குங்கொல்லலென்னுந்தொழிலாலுண்டாகிய வுயிர்ப்பிரி வாகியபயனையுண்டாக்குகிறமைபின்விளக்குகை யாகியதொழிலையுடைத்தாயிற்று-கொல்ல லாவது-உயிரைப் பிரிக்குந்தொழில்.

கண்ணாற்குருடன்-காலான்முடவன்-என்பவைமுதலிய- உருபையேற்ற-அவயவப்பொருட்கும்-அவயவிப்பொருளில் விசேடணமாயிருக்கிறகருமத்துக்குமுளதாகியசம்பந்தமுருபின்பொருளாயிற்று.

இங்கேயுருபையேற்றபெயர்ப்பொருளாகியவவயவமானகண்-குருட னென்னு மவய விப்பொருளின்விசேடணமாகியகுருட்டுத்தன்மைக்கிடமாயினதறிக.

மற்றுமிவ்வாறும்.

உருபையேற்றபெயர்ப்பொருளைவிடயமாகவுடையஞானத்தாற்றோன்று ஞானத்திற்குவிடயமா குகையுருபின்பொருளாயிற்று.

உ-ம்.

சடையினுற்றுபதன்-எ-ம்.

இங்கேசடையை விடயமாகவுடையசடை ஞானத் தாற்றுறுகிறதாபதன்என்கிற ஞானத்திற்குத்தபசு டைமைவிசேடணமாகவிடயமாயினதறிக

ஆல்- ஆ- என்னுமிரண்டும்- தொறுவென் பொரு ளில்வரும்.

உ-ம்.

ஊரார்லோர்தேவகுலம்-எ-ம்.

ஊர்தோறுமொவ் வொருதேவகுலமெனப் பொ ருள் கொள்ளப்படும்.

தொறு வென்பது தன்னையேற்றபெயர்ப் பொரு ளெங் குமப்பெயர்ப்பொருளோடியையும்பொருளிரு க்குகை.

உருடை யற்றபெயர்ப்பொருளிலிருக்கிறதொட ரும்பொருளோ டொற்றுமையுருபின்பொருளாயிற்று.

உ-ம்.

தாளாற்றுமனை-எ-ம்.

இங்கே யுருபைத் தொடரும் தாமரை யென்னும் பொருளோ டொற்றுமை- தாளிலிருக்கின்றது-ஆதலா லவ்வொற்றுமையுருபின் பொருளாயினதறிக.

குடத்தன்மையாற் குடத்தை யறிந்தானென்பது முதலியவற்றை-முதலிய வென்பதனாற்கொள்க.

இங்கேகுடத்தன்மையைவிசேடணமாகவும்- குடத்தைவிசேடியமாகவுமுடைய வுணர்ச்சியெனத்தோன்றுதலாற்றன்னேயேற்றவோர்ப்பொருளிலிருக்கிற விசேடணமாகுகையுருபின் பொருளாயிற்று - மற்றுமவருவனவறிக.

இந்தநூல்- ஆன்-உருபுகளி ரண்டாவதன் பொருளாகிய செயப்படு பொருளிலும்- நான்காவதன்பொருளாகியகோளிப்பொருளிலும் 'வரும்"

உ-ம்.

தயிராலோமஞ்செய்தான்- பாலாலோமஞ் செய்தான் - எனச்செயப் படுபொருளில் - மூன்ற னுருபு வந்தது.

இவற்றிற்குத் தயிரை யோமஞ் செய்தான் பாலே யோமஞ்செய்தான்-எனப்பொருள் கொள்ளப்படுதலி ற்செயப்படுபொருளெனப்பட்டன.

வரையின் மகளிரான்மாலேவழங்கி யோனெனல் கோளிப்பொருளின்மூன்றனுருபுவந்தது.

தன்னைமுடிக்கும் வினைச்சொல்லில்லாமல் உரு பைமுடிக்கும் வினையைச்சொல்லுஞ்சொல்லில்லாமல் அவ்வினைகுறிப்பாகத்தோன்றுமிடத்துமுருபுவரும்

உ-ம்.

தன்பத்தாலமையும்- எ- ம்- இங்கே தன்பப்படு தலாகிட்டற்றொழில் குறிப்பாகத் தோன்றிற்று.

இவ்வினையில்- தன்பங்காரணமாதலான்-மூன்றனு ருபேற்றது-மற்றுமிவ்வாறுவருவனவறிக.

காட்டியவுதாரணங்கடோறும். ஆனுருபையுமொ ட்டிச்சொல்லிக்கொள்க.

ஒடு-ஓடு-என்னும் பின்னிரண்டுருபும் உருபையே ற்றப்பெயர்ப்பொருளிலிருக்கு முடனிகழ்ச்சியும் உற

மானமாகுதையும், ஒற்றுமையும்பொருளாம். தலைமை ப்பொருளைத்தொடருங் காலத்தினிகழ்வதாயும், அத னையொத்ததாயுமிருக்கிற வினையையுடைத்தாகுகை. தலைமைப்பொருள், வினையொடுமுடியும், உருபேற் றப்பெயர்ப்பொருள், தலைமைப்பொருளோடு முடியு மென்றறிக,

உ-ம்

மகனொடுதந்தைவந்தான்.

தந்தையொடுமகன்வந்தான்.

மகனொடுதந்தைபெரியன்.

அரிசியொடுபருப்பையிட்டான்-எ-ம்,

தலைமைப்பொருள்வினையொடு முடிதலன்றிப் ப ண்புப்பெயரொடு முடிதலுண்டு.

உ-ம்.

மகனொடுதந்தையினதுபெருமை-

சிலவிடத்திற் றலைமைப்பொருளைத்தொடரும் வி னிகழுமிடத்திலதற்குப் பிற்காலத்தி னிகழ்வதாயு மிருக்கிற வினையையுடைத்தா யிருப்பது முடனிகழ் ச்சிப்பொருளாம்.

உ-ம்,

ஏவ்வளொடுமுந்தைதவிதைத்தான்-எ-ம்,

தலைமைப்பொருளிலிருக்கும் பயனையுண்டாக்குந்தொழிலின் வினைமுதலிலிருப்பதாயும், அத்தொழிலின் வேறுபட்டதாயுமிருக்கிற தொழிற்பயனையுடையது முடனிகழ்ச்சிப்பொருளாம், மற்றுஞ் சிலவிடத்தில-தலைமைப்பொருளிலிருக்கிற தொழினிகழுங்காலத்தி னிகழ்கிற வேறுதொழிலை யுடையது முடனிகழ்ச்சிப்பொருளாம்.

உ-ம்.

காவோடறக்குளந்தொட்டான்-எ-ம்.
தொடியொடுதொலகவின்வாடியதோள்-எ-ம்.

ஆசிரியர் தொல்காப்பியர்- ஒடு- உருபுசிறப்புடைய வுடனிகழ்ச்சிப்பொருளில் வருமெனபர.

உ-ம்.

ஆசிரியனொடுமாணக்கன்வந்தான்.
அரசனொடிளையர்வந்தார்-எ-ம்.

சிறப்புடையபொருள் குலந்தவங்கல்வியொழுக்கமுதலியவற்றையுடையபொருளாம்.

மேற்காட்டிய வுதாரணங்களுள் - ஆசிரியனும் அரசனுமுறையே மாணக்கனிலும் - இளையரிலுஞ் சிறப்புடையபொருளாதலா லப்பொருளுட னிகழ்ச்சிப்பொருளானமைகாண்க. மற்றுமிவ்வாறறிக.

ஆல் - ஆன் - இவை சிறப்பின்மையுட னிகழ்ச்சிப் பொருளிலும்வரும்.

உ.ம்.

நூல்குகையயானோங்குருடைய - எ - ம்.

உறழ்பணியானுயர்மருப்பின - எ - ம்.

இவ்வொடுவுருபு - உபமானமாதற்பொருளிலும் வரும்,

உ-ம்.

மதியொடுசமானமுகம்.

இவ்வொடுவுருபுஒற்றுமைப்பொருளிலும்வரும்.

உ-ம்.

எழுத்தொடுபுணர்ந்தசொல் - எ - ம்.

இவ்வொடுவுருபு செயப்படுபொருளிலும்வரும்.

உ-ம்.

சாத்தனொடுசேர்ந்தான்.

மதியொடொக்குமுகம்-எ-ம்.

இவ்வொடுவுருபு இடப்பொருளிலும்வரும்;

உ-ம்.

பாலொடுநீர்கலந்தது.எ-ம்,

மற்றும்வருவனவெல்லாமறிக,

காட்டியவுதாரணங்கடோறுமோடுருபை யொட்டுக;

நான்கனுருபு-கு-ஒன்றேயாம்.

அதற்குப்பொருள் - தன்னையேற்றபெயர்ப்பொருளிலிருக்கிற கோளித்தன்மையும், தொடருஞ்சொற்பொருளாலுண்டாகுகையும், தொடருகிற கேடுநினைத்தல். ஆக்கவினைத்தன்முதலிய சிலவினையையுண்டாக்கும் வெகுட்சி, யுவப்புமுதலியவற்றிற்கு விடையமாகுகையும். உற்பாதத்தாற் குறிக்கப்படுகையும், தொடருஞ்சொற்பொருளாகிய சுகதுக்கத்திற் கிடமாகுகையும் வாழ்த்தற்றொழில் வைதற்றொழி லிவற்று

டுசம்பந்தமும், தொடருமமைதற் பொருளோடு சம்பந்தமுமாம்.

கோளித்தன்மை கொடைப்பொருளொடு சம்பந்தத்தை யுடைத்தாகுகை.

கொடையாவது கொடுக்கப்படுபொருள்.

கொடுத்தலாவது ஒருபொருளிற்றன் னுரிமையைக்கெடுத்துப் பிறனுக்குரிமையை யுண்டாக்குந்தொழில்.

இவ்விரண்டிற்குஞ் சம்பந்தமாவது, உடைமையும், உடைத்தாகுகையும்.

உ-ம்.

அந்தணனுக்காவைக்கொடுத்தான்-எ-ம்,

இங்கே, ஆ-கொடைப்பொருள்-அதனோடுசம்பந்தமுடையபொருளந்தணன்- ஆதலால் - அந்தணன்- கோளிப்பொருளாம், கொடுத்தற்பொருளாகிய வழங்கல், ஈதல், முதலியவாய்பாடுங்கொடுத்தற்பொருள் குறிப்பாய்த்தோன்றுஞ்சில பிறவாய்பாடுங்கொள்க.

உ-ம்.

அந்தணனுக்காலைவழங்கினன்-எ-ம்.

ஆவிறகுநீர்விட்டான்-எ-ம.

நீர்விட்டான் என்பதற்கு நீர்கொடுத்தனர் எனக் குறிப்பாகப்பொருளாதலறிக.

சிலவிடத்துச்சொல்லுதல் முதலியபொருளில் வருமுதனிலையானமுடிந்து - அம்முதனிலையின் செயப்படுபொருளோடு சம்பந்தமுடைய பொருளுங் கோளிபபொருளெனப்படும்.

உ-ம்,

மாணாக்கனுக்குநூற்பொருளுரைத்தான் எ-ம்.

இந்நான்கனுருபுதன்னை பெற்றபெயர்ப்பொருளிலிருக்கிறதாயும் வினைமுதலைவிச்சிக்கப்பட்டதாயு மிருக்கிற வினையோடுசம்பந்தமுடையபொருளுமோர்கோளிப்பொருளாம.

உ-ம்.

களவனுக்குப்பிடுக்கின்றாள்.

உருபைத்தொடரு முடன்படுதலில் விடயமான வினைப்பெயர்ப் பொருளுங் கோளிப் பொருளென ப்படும்,

உ-ம்.

தீயோர்கொலைக்குடம்பட்டார்.

நல்லோரறத்துக்குடம்பட்டார்-எ-ம்.

தொடருஞ்சொற்பொருளாலுண்டாகுகை யுருபி ன்பொருளாம்.

உ-ம்.

கூலிக்குவேலைசெய்தான்-எ-ம்,

அதனாலுண்டாக்குகிற காரணம், நிமித்தகாரணமெ ன்று முதற்காரணமென்று மிருவகைப்படும், நிமித்த காரணம்பொருட்டு முதற்காரணமதுவாதல்.

உ-ம்-

கூலிக்குவேலை-கூழிற்குக்குற்றேவல்.

அறிவிற்கன்பு முதலியவாம்.

முதற்காரணத்திற்குதாரணம்.

குண்டலத்திற்குப்பொன்-சோற்றிற்கரிசி-ஆடைக்கு நூல்,தயிர்க்குப்பால-என்பவைமுதலிய.

முதற்காரணம்-ஆதிகாரணம்-சமவாயிகாரணம்-முக்கியகாரணம்.-என்பன ஒருபொருட்கிளவி.

தொடருங்கேடுகினைத்தல் - ஆக்கநினைத்தன்முதலிய சிலவினையையுண்டாக்குகிற வெகுட்சிக்கும் உவப்புக்கும் விடயமாகுகையுருபின்பொருளாம்.

உ-ம்.

சாத்தனுக்குக்கேடுநினைக்கின்றான்-எ-ம்,

உற்பாதத்தாற்குறிக்கப்படுகையுருபின்பொருளாம்,

உ-ம்.

மழைக்குமின்னல்-எ-ம்.

தொடருஞ்சொற்பொருளாகிய சுகதுக்கத்திற்கிடமாகுகை யுருபின்பொருளாம்.

உ-ம்.

அந்தணனுக்கிதம்வேதம்.

வாழ்த்தற்பொருளில்-வைதற்பொருளிலவற்றின் சம்பந்தமுருபின்பொருளாம்,

உ-ம்.

மாணாக்கனுக்கறிவுண்டாகும்.

பகைவர்க்குக் கேடுண்டாகுக் - எ - ம்.

தொடருந்தகுதிப்பொருளுருபின்பொருளாம்.

உ-ம்.

அருங்கலம[illegible]ற்குரித்து.

நாணம்பெண்ணிற்குரித்து - எ-ம்.

தொடருமுரிமைத்தற்பொருளோடு சம்பந்தமுருபின்பொருளாம்.

உ-ம்.

கன்றுக்குப்பாலமையும்.

கன்றுக்குப்பால்போதும் - எ - ம்,

இந்நான்குனுருபு உருபைத்தொடருஞ் சொற்பொருட்குப்பயனாகியதொழிலையுணர்த்துஞ் சொல்லின்றியத் தொழிற்றோன்றுழியத்தொழிற்குச் செயப்படு பொருளினுங்கனுருபுவரும்.

வ-று.

மழத்துக்குச்சென்றான்-எ-ம்.

பிணிக்குமருந்து - எ - ம்.
செயப்படுபொருளாகிய விரண்டனுருபின்பொருளிலு
ம்- கரணப்பொருளாகிய மூன்றனுருபின்பொருளிலு
ம்-நீக்கப்பொருளும் - எல்லைப்பொருளுமாகிய வைந
்தனுருபின்பொருளிலும் - கிழமைப் பொருளாகிய
ஆறனுருபின்பொருளிலும்-அதிகரணப் பொருளாகிய
ஏழனுருபின்பொருளிலும்- சிலவிடத்துநான்கனுருபு
வரும்.

உ - ம்.

அவனைக்கொள்ளுமிவ்வணிகலம் - எ - கு.
அவனுக்குக்கொள்ளுமிவ்வணிகலம் -எ- ம்.
தெவ்வையைக்காட்டிவிடும் - எ - கு.
தெவ்வைக்குக்காட்டிவிடும் - எ - ம்.
கண்ணாற்காணலாம் - எ - கு.
கண்ணிற்குக்காணலாம் - எ -ம்.
ஊரிற்றீர்ந்தான் - எ - கு.
ஊர்க்குத்தீர்ந்தான் - எ - ம்.
அவ்வூரினின்று மிவ்வூர்காவதம் - எ - கு.

அவ்வூர்க்கிவ்வூர்காவதம்.

ஊரினின்றும் வெளியிலிருக்கிறான் - எ-கு.

ஊர்க்குவெளியிலிருக்கிறான் - எ - ம்.

மறியதுதாய் எ - கு.

மறிக்குத்தாய-எ- ம்.

ஊரக்கட்சென்றான்-எ- கு.

ஊர்க்குச்சென்றான் - எ - ம்.

மனாற்கணின்ற காணற்கிழங்கின்முளை - எ -கு.

மனாற்கீன்ற காணற்கிழங்கின்முளை - எ - ம்.

மன்னவன்மக்கட் கிறையென்றுவைக்கப்படுவான் எ-கு. மன்னவன்மைக்கட்கிறை-எ-ம். வருவனவறிக.

ஐந்தாம்வேற்றுமைக்குருபு இன் - இல் - என இவ்விரண்டுமாம்.

அவற்றிற்குப்பொருள் தன்னையேற்றப் பெயர்ப்பொருளிலிருக்கிற பிரிவிற்குமாத்திர மிடமாகுகையும் முதற்காரணப்பொருண்மையும் எல்லைப்பொருண்மையும்- ஏதுப்பொருண்மையும்- ஒப்புப்பொருண்மையும்- விடயப்பொருண்மையும்- வேற்றுமைக்கெதி

ர்ப்பொருண்மையும்-சொல்லும்பொருண்மையும்-பொருளாம்.

உ - ம்.

மலையின்வீழருவி.

தமரிற்றீர்ந்தான்.எ-ம்.

தந்தையிற்றோன்றிய குழவி.

பிரமனிற்றோற்றியவுலகம் - எ - ம்.

கருவூரிற்கிழக்குமருவூர்.

மதுரையின்வடக்குச் சிதம்பரம்.

சென்னையின்மேற்குக்காஞ்சி -எ- ம்.

ஊரினின்றும்வெளியிலிருக்கிறான்

என்பதுமுதலானவையு மெல்லைப்பொருளாம்.

உருபையேற்றப்பெயர்ப் பொருளி லிருக்கிறயாதொருவழியினித்துணையென்னுமளவுக்கும்யாதொருகாலத்தினித்துணையென்னு மளவுககு மெல்லைப்பொருண்மையிலும்வரும்.

உ - ம்.

காட்டினின்று மூர்காவதம்.

ச்சியினின்றுங்கடலேங்காவதம்-எ-ம்

ஏதுப்பொருண்மை யுருபின்பொருளாம்.

உ-ம்.

அறிவிற்பெரியன்.

பழியினஞ்சினன் - எ - ம்.

ஒப்புப்பொருண்மை யுருபின்பொருளாம்.

உ-ம்.

காக்கையிற்கரிது களம்கனி.

பாலின்வெளிது கொக்கு - எ - ம்.

ஒப்பக்கூறியவழியே யொப்புப்பொருளாம்.

உயர்வுதாழ்வு கருதிக்கூறிய வழியவதிப் பொரு
ளாம்.

உ-ம்.

காக்கையிற்கரிது களம்கனி - எ - ம்.

ஆவினிழிந்ததுமேதி - எ - ம்.

விடயப்பொருண்மையுருபின்பொருளாம்.

உ-ம்.

பாவத்தினின்றும் வெறுக்கின்றான்.

பாவத்தினின்று மொழிகின்றான்

அறத்தினின்றுமயங்குகின்றான் எனவரும்.

வேற்றுமைக்கெதிர்ப்பொருண்மை யுருபின்பொ ருளாம்.

உ - ம்.

நீரினில்வேறு நெருப்பு - எ - ம்.

சொல்லும்பொருண்மை யுருபின்பொருளாம்.

உ - ம்.

ஆசிரியனின்று மாணாக்கன் பாடங்கேட்கின்றான் - எ - ம்.

இவ்வைந்தனுருபு மூன்றாவதன்பொருளாகிய காரணப்பொருளிலும். உடனிகழ்ச்சிப்பொருளிலும் நான்காவதன்பொருளாகிய கோளிப்பொருளிலும்வரும்.

உ - ம்.

பாம்பினிற்கடைந்தகடல்

வாளின்வெட்டினான் - எ - ம்.

சிதலெறும்பாதி மூக்கறிவின் மூவறிவுயிர்- எ-ம்

நாகரினன்புசெய்தான் எனவருவனவறிக.

ஆறும்வேற்றுமைக்குருபு - அது - ஆது - அ - என மூன்றாம்.

தொடர்மொழிப்பொருளொன்றாயின் அது - ஆது- இவ்விரண்டும்வரும்-பலவாயின் அகரவுருபுவரும்

இவற்றிற்குப்பொருள் உருபையேற்றபெயர்ப் பொருளிலிருக்கிறதாகிய வுருபைத்தொடரும் பெய ர்ப்பொருளோடுசம்பந்தமாம்.

இது தற்கிழமைப்பொருளென்றும் பிறிதின்கிழமைப் பொருளென்றும் இருவகைப்படும்.

தற்கிழமைப்பொருள் சினையும் பண்பும் தொழி லும் ஒருபொருளின்கூட்டமும்பல பொருளின்கூட்ட மும் ஒன்றுதிரிந்து ஒன்றானதும் ஆகியவாறுமாம்.

உ- ம்.

சாத்தனதுகண் - சினை.

நிலத்ததகலம் - பண்பு.

சாத்தனதுசெலவு- தொழில்.

எள்ளதுகுப்பை - ஒருபொருளின்கூட்டம்.

...ள்ளதுசாந்து-ஒன்றுதிரிந்தொன்றானது.
பிறிதின்கிழமைப்பொருளாவன- பொருளும்-இடமும்
காலமுமாகியமூன்றுமாம்.

உ - ம்.

முருகனதுவேல் - பொருள்.
முருகனது குறிஞ்சி - இடம்.
வெள்ளியதாட்சி - காலம்.
மேற்சொன்ன வேற்றுமைப்பொருள்களைச் சம்பந்தப்
பொருளாகக் கருதிறுறனுருபுவரும்.

உ - ம.

அரிசியைச்சமைத்தல்-அரிசியதுசமைத்தல்.
கோடாலியால்வெட்டல்-கோடாலியினதுவெட்டல்;
சாத்தனால்வெட்டல்-சாத்தனதுவெட்டல்.
ஏழாம்வேற்றுமைக்குருபுகண்முதலியவுருபாம்.
அது உருபையேற்ற பெயர்ப்பொருளாகிய பொ
...இடம் - காலம் - சினை - குணம் தொழிலாகிய
...வுமிருக்கின்ற - தற்கிழமைப் பொருட்கும்-
பிறிதின்கிழமைப்பொருட்குமிடமாகுகையாம்-இடம்-
...அதிகரணம் - தற்கிழமைப்பொருளும் - பிறிதி
ன்கிழமைப் பொருளுமாமாறு - ஆறனுருபினிலக்கண
...த்தவிடத்துரைத்தாம்.
மணியின்கணொளி - தற்கிழமைப்பொருட்கிடம்,

மனையின்கணன்றில்-பிறிதின் கிழமை.
காளின்கணுழிகை- தற்கிழமை.
வேனிற்கட்பாதிரி -பிறிதின்கிழமை.
கையின்கண்விரல் - தற்கிழமை.
கையின்கட்கடகம் - பிறிதின்கிழமை.
கறுப்பின்கணழகு - தற்கிழமை,
இளமைக்கட்செல்வம் - பிறிதின்கிழமை.
ஆடற்கட்சதி - தற்கிழமை.
ஆடற்கட்பாட்டு - பிறிதின்கிழமை.

இதற்கு உருபையேற்ற பெயர்ப்பொருளிருக்கிறவினைமுதல் வழியாக வினைமுதல்- வினைக்கிடமாகுகையும் - செயப்படு பொருளின்வழியாக வதிலிருக்கிற பயனுக்கிடமாகுகையும்- பொருளாமென்பர்- அவ்வதிகரணம்-ஔரோவழிமேவல்- எங்குமேவல்-விடயம்-என மூவகைப்படும்.

உ-ம்.

பாயிலிருக்கிறான்கொற்றன்-இங்கே.

இருத்தலென்னுந்தொழிற்கு - அதற்காதாரமான வினைமுதலாகிய கொற்றன்வழியாகப்பாயிடமாயிற்று. இது-ஔரோவழிமேவல்,

பானையிலரிசிசமையட்டான்- இங்கே- அரிசிநெகிழ்ச்சியாகிய பயனுக்கு - அதற்காதாரமான செயப்படு

பொருளாகிய வரிசிவழியாகப் பானையிடமாயிற்று-இதுவும் ஓரோவழிமேவல - இதைவடநூலார் - ஔபசிலேஷமென்பர்- அவயுவமெல்லாமிடமாகாம லேகதேசமிடமானதாலோ ரோவழிமேவலாயிற்று.

எள்ளினெய்யிருக்கின்றது.

பாலினெய்யிருக்கிறது-எ-ம்.

இருத்தற்றொழிற்கு-அதற்காதாரமான நெய்யின்வழியாக எள்ளும்பாலு மிடமாயின - இது எங்குமேவல- இதைவடநூலார். அபிவியாகமென்பர்- இதற்குஅவயவமெல்லா மிடமாதலா லெங்கும் வியாப்கமாயிற்று.

வீட்டின்கண் விருப்பிருக்கிறது.

தாயின்கண் விருப்பிக்கின்றது-எ-ம்.

இவ்வேகவினைமுதலாகிய விருப்பத்திற்கும்-அன்பிற்குமுறையே வீடும்-தாயும் விடயமாக-அதிகரணமாதலா லவ்வினைமுதல்களின் வழியாக வவற்றின் தொழிலாகிய விருத்தற்கும் வீடுந்தாயும் விடயமாக வதிகரணமாயின. ஏழனுருபிற்கு மற்றும்பொருள் கூட்டிப்பிரித்தற் கெல்லையாகுகையும் - பிரித்துக்கூட்டலிற்கூழும்பொருளாகுகையும், ஞானத்திற்கு விடயமாகுகையும் பொருளாம்.

கூட்டிப்பிரித்தல் - உருபைத்தொடரு மொழிப்

பொருளு மடங்கிய குழுவிலடங்கியிருக்கிற பிறபொருளில்லாம லுருபைத்தொடரும்- மொழிப்பொருளிருக்கிற தன்மையாலப்பொருளடங்கிய குழுவினின்று மதனை வேறுக்குகை.

அத்தன்மை-சாதி-குணம்-தொழில்-பெயர்- என நால்வகைப்படும்,

மக்களிலுயர்ந்தோரந்தணர்-சாதி.

ஆக்களிற்காராப்பாலுளது-குணம்.

செல்வோர்களிலோடுவோன்கடிதாரடைவன்-தொழில்

மாணுக்கரிற்சாத்தன்-வல்லவன்-பெயர்-மற்றுமறிக.

பிரித்துக்கூட்டலிற் குழூஉப்பொருளாகுகை.உருபையேற்ற பெயர்ப்பொருளில்லாத தன்மையையுடையதாயுந் தானடங்கிய குழுவிலடங்கிய பிறபொருளில்லாத தன்மையா லக்குழுவினின்றும் பிரிக்கப்பட்டதாயுமிருக்கிற வொருபொருளாற் சேரப்பட்ட குழூஉப்பொருளாகுகை யுருபின்பொருளாயிற்று.

அறஞ்செயுமகன்றேவருள் வைக்கப்படுவான்-எ-ம்.

ஞானதிற்கு விடயமாகுகை- உருபைத்தொடருந்தொழிலை விடயமாகவுடைய ஞானத்தைத்தோற்றுவிக்கிற ஞானத்திற்கு விடயமாகுகை யுருபின்பொருளாயிற்று.

பால்கறக்கையில்வந்தான்-எ-ம்.

இவ்வேழனுருபு வினைப்பெயரிறுதியில் வருதலறிக அவ்வுருபுகள் - கால்- கடை - இடை - தலை - வாய்-திசை-வயின்-முன்-சார்-வலம்-இடம்-மேல்- கீழ்- புடை-முதல்-பின்-பாடு-அளை-தேம்-உழை-வழி-உழி-உளி-உள்-அகம்-புறம்-இல்-ஆன்னுமிருபத்தெட்டும்பிறவுமாம்.

உ-ம்.

ஊர்க்கானிவந்தபொதும்பர்-கால்.

வேலின்கடைமணி போற்றிண்ணியான்-கடை.

கல்லாரிடைப்புக்கு-இடை.

வலைத்தலைமானன்ன நோக்கியர்-தலை.

குரைகடல்வாயமுதென்கோ-வாய்.

தேர்த்திசையிருந்தான்-திசை,

மற்றுமிங்ஙனம் வருவனவறிக.

விளிவேற்றுமை யிரண்டாமியலில் விரிவாயுரைத்தனம்.

முற்றிற்று.

# விபக்திபோதினி.

## சங்கிரகம்.

## வேற்றுமைமரபு.

### அவையடக்கம்

உன்னமுடியாத வோதநீர்வான்வாய்ப்பட்
டென்னவமிழ்தன் றில்லையோ. மண்ணின்மே
னல்லாரைச்சேர்தலா லன்சொன்னபுன்சொல்லு
மெல்லாருங்கைக்கொள்வா ரிங்கு. (க)

காண்டகுசீ ரைபொருகு வின்னதுகன்விளியென்
றீண்டுரைப்பின்வேற்றுமையெட்டாகுமீண்டவைதாந்
தோற்றும்பெயர்முன்னரொழுங்கொடர்ந்தியலு
மேற்றபொருள்செய் யிடத்து. (உ)

ஐயெனுருபிரண் டாவததுவினையு
மெய்துங்குறிப்பு மியலவருக் - தையலாய்
ஆனொடுமூன்று வதுதான்வினைமுதலு
மேனைக்கருவியுமா மீங்கு. (ந)

ஒதுங்குகா வுருபுநான்காவதகும்
தியாதிடத்துமிபொருளை யேற்குமாங் - கோதிலா

வின்னுருபைந்தாவ திகனினின்றெல்லேமுத
லென்னுமொருநான் கிடத்து. (௫)

அதுவென்பதாறு முருபாமிதன
திதுவென்கிழமை யிரண்டெய்து-மிதமுறையாற்
கண்ணென்பதேழா முருபாகுங்காலகில
கன்னும்வினையிடத்து நன்கு. (௬)

உ - வது.

உருபுமயக்கியல்.

வேற்றுமையொன்ற னுரிமைக்கண்வேறொன்று
தோற்றமுருபு தொகவருத-லேற்றபொருண்
மாறினுந்தானிற் றல வந்தொன்றினொன்றேற்ற
றேற்றவருமெய்ந்நூற் றெளிவு. (௬)

இருசொல்லிறுதி யிரண்டேழல்லாத
வுருபுதொகாதென் றனைப்ப-வுருபுதான்
றொக்கவிடத்துடனே தொக்கும்விரியுமிடத்
தொக்கவிரிசொல்லு முள. (௭)

ஒன்றன்பேரொன்றற் குரைப்பதாமாகுபெயர்
சென்றவைதாந்தம்முதலிற் சேர்தலோ-டொன்றுத

வேறொன் றிற்சேர்தலென விரண்டாம்வேற்கண்ணு
யீறுதிரிதலுமுண் டுண்டு,

## ௩-வது.

## விளிமரபு.

ஈற்றயனீடும் லளக்கடாமேசாரந்
தோற்றமுறைப்பெயர் தன்னுங்கா-லாற்ற
வயனெடி தாம்பேரு மளபெடையாம் பேரு
மியல்பாம்விளிக்கு மிடத்து.

விரவுப்பெயரெல்லாம் விளக்குங்கான் முன்னை
மரபிற்கு மஃறிணைப்பேர் வந்தான்-மரபின்
கொளவருமேகாரமுங் கூறுகாற்செய்மைக்
களவிறப்பவீரு மவை.

முற்றிற்று.

☞ கிரியாபோதினியென்னும் வினையுணர்ச்சி பதிப்பித்துக்கொண்டு வருகின்றனம, வேண்டினர் வருவித்துக்கொள்ளப்படும்.